# சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

## வாராந்தப் பாடசாலை

## வாரம் 01- அலகு 01 எண்கோலங்கள்

## கணிதம்

**03.01.2021 – 09.01.2021**

**தரம் 08**

பெயர் :- ……………………

தயாரிப்பு :- **A.R.பிரேம்குமார்** Dip in Teach Maths(Merit)

**கீழே காட்டப்பட்டுள்ள பயிற்சிகளைச் செய்வதற்காக அலகு 01 எண்கோலங்கள் எனும் பாடப்பரப்பின் மீது கவனத்தைச் செலுத்தவும்.**

(கீழுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன் **பாடப்புத்தகம் பகுதி I இல் பக்கம் 01, 02 இலுள்ள விளக்கத்தினைப்** பார்க்கவும்)

01. **பின்வரும் எண்கோலங்கள் ஒவ்வொன்றிலும் அடுத்து வரும் இரு உறுப்புக்களையும் எழுதுக.**

I. 3, 6, 9,12,…., ….

II. 2, 7, 12, 17, …., ….

III. 5, 10, 15, 20, …., ….

IV. 1, 3, 5, 7, …., ….

V. 1, 4, 9, 16, …., ….

VI. 12, 8, 4,0, …., ….

VII. 40, 30, 20, 10,…., ….

VIII. -6,-9, -12, -15, …., ….

IX. -5, -3, -1,+1,….,….

X. -20, -13, -6, +1, …., …..

(கீழுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன் **பாடப்புத்தகம் பகுதி I இல் பக்கம் 04 - 08 வரையிலான விளக்கத்தினைப்** பார்க்கவும்.)

02. **3, 7, 11, 15, …** **என்றவாறு அமைந்துள்ள எண்கோலமொன்றின் பொதுவுறுப்பைக் காணும் செயற்பாட்டிற்கான பின்வரும் அட்டவணையை நிரப்பி பொதுவுறுப்பைக் காண்க.**

| உறுப்பு | 4 இன் மடங்கு -1 | பெறுமதி |
|---|---|---|
| 1 | 1×4 -1 | 3 |
| 2 | 2×4 -1 | |
| 3 | | |
| 4 | | |
| n | | |

03.**பின்வரும் ஒவ்வொரு பொதுவுறுப்பிற்குமான முதல் மூன்று உறுப்புக்களை எழுதுக.**

**I. 6n** **II. 2n + 3** **III. 7n – 3**

04. **5, 8,11,14,… எனும் எண்கோலத்தின்,**

I. முதல் உறுப்பையும் பொது வித்தியாசத்தையும் தருக.

II. இவ் எண்கோலத்தின் பொதுவுறுப்பைக் காண்க.

III. இவ் எண்கோலத்தின் 12ஆம் உறுப்பைக் காண்க.

05. **8,13,18,23,… எனும் எண்கோலத்தின்,**

I. முதல் உறுப்பையும் பொதுவித்தியாசத்தையும் தருக.

II. இவ் எண்கோலத்தின் பொதுவுறுப்பைக் காண்க.

III. இவ் எண்கோலத்தின் 10 ஆம் உறுப்பைக் காண்க.

IV. 43 இவ் எண்கோலத்தின் எத்தனையாம் உறுப்பு எனக் காண்க.

06. 6n -4 எனும் பொதுவுறுப்பை உடைய எண்கோலத்தின்,

I. முதல் நான்கு உறுப்புக்களையும் எழுதுக.

II. இவ் எண்கோலத்தின் பொதுவித்தியாசம் யாது?

III. இவ் எண்கோலத்தின் 15 ஆம் உறுப்பைக் காண்க.

IV. 56 இவ் எண்கோலத்தின் எத்தனையாம் உறுப்பு?

<u>பலவினப் பயிற்சி</u>

07. ரம்யா எனும் மாணவி புதிய பென்சில் பை ஒன்று வாங்குவதற்கு தனக்குக் கிடைக்கும் பணத்தினை சேர்த்து வைக்க நினைத்தாள். இதற்காக புதுவருடத் தினத்தில் அவளது அப்பா வழங்கிய ரூ 20 இலிருந்து சேமிக்க ஆரம்பித்தாள். தனக்கு திண்பண்டம் வாங்கி உண்ண கிடைக்கும் பணத்திலிருந்து ஒவ்வொரு நாளும் ரூ 5 வீதம் உண்டியலில் இட்டு சேமித்து வந்தாள்.

I. முதல் நான்கு நாட்களில் உண்டியலில் இருக்கும் பணத்தை எண்கோலமாக எடுத்துரைக்க.

II. பெறப்பட்ட எண்கோலத்தின் பொதுவுறுப்பைக் காண்க.

III. 10 நாட்களின் பின் உண்டியலில் இருக்கும் மொத்த பணம் எவ்வளவு?

IV. எத்தனையாம் நாள் ரூ 115 இனை ரம்யா சேமித்திருப்பாள்?

V. பென்சில் பை ஒன்றின் விலை ரூ 250 எனின், அதனை வாங்குவதற்கு எத்தனை நாட்கள் பணத்தினை சேமிக்க வேண்டும்?